**OS. 22/2024**

**நாள். 24.02.2026.**

**பி.வா.சா. 1 – பாலச்சந்திரன், த/பெ. சாத்தையா**

4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–

2ம் பிரதிவாதி என் தந்தை என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி என் சகோதரர் என்றால் சரிதான். நான், என் தந்தை மற்றும் சகோதரர் ஆகிய மூவரும் தனித்தனியாக வெவ்வேறு முகவரிகளில் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். தாவா கிரைய ஒப்பந்த ஆவணம் எனக்கும், வாதிக்கும்தான் ஏற்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்து சம்மந்தமாக கிரைய தொகையை என் சார்பாக பெற்றுக்கொள்வதற்கு 2, 3 பிரதிவாதிகளுக்கு எழுத்து மூலமாக எழுதிக்கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. அதேபோல் 2, 3 பிரதிவாதிகள் தாவா சொத்து கிரைய பணத்தை பெற்றுக்கொண்டதாக எனக்கு எழுத்து மூலமாகவோ அல்லது வாய்மொழிமூலமாகவோ தகவல் சொன்னார்களா என்றால் இல்லை. தாவா கிரையம் சம்மந்தமாக 2, 3 பிரதிவாதிகள் மீதும், வாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதால் எனக்கும், 2, 3 பிரதிவாதிகளுக்கும் பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரிதான்.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.